<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>O.S. 347/2021</u>**

வா.சா.1 தேதி. 23.06.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேமாவதி | க/பெ. | குப்புராஜ் |
| வயது | 71 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பு ஆவணங்களாக 20.12.2020 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 21.06.2021 தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்த காசோலை அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 22.06.2021 தேதியிட்ட வங்கி மெமோ அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 30.06.2021 தேதியிட்ட பிரதிவாதிக்கு வாதி தரப்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 12.07.2021 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.